**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**-----**

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI**

**Sessions Case No.18 of 2023**

**Deposition of witness for** : **Pw10**

**Name** : **மருத்துவர் திரு. சோமசுந்தரம்**

**Father's / Husbend Name** :

**Village** :

**Taluk** :

**Calling** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of August 2025.**

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தடிக்கல் அரசு உதவி மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். 06.05.2022 ம் தேதி நான் காவேரி பட்டிணம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணி புரிந்து வரும்போது அன்று மாலை 3.30 மணி அளவில் விஜயகுமார் ஆண் 45 வயதை சார்ந்தவர். தகப்பனார் பெயர் கிருஷ்ணன் வேலாம்பட்டி பகுதியை சார்ந்தவர் . தன்னை அன்று மதியம் 1 மணி அளவில் தன்னை வேலம்பட்டியில் கத்தியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்ததில் தலையில் 20 செ.மீ அளவில் வெட்டுகாயம் காணப்பட்டது. மேலும் கண்ணிய காயம் வலது மணிக்கட்டில் பின்புறத்தில் காணப்பட்டது. அவரை மேல் சிகிச்சைக்காக அனுப்பியதில் கிருஷ்ணகிரி தலைமை மருத்துவமனையில்

07.05 .2022 முதல் 10.05.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்துள்ளார். அங்கு எடுக்கப்பட்ட CT Brain பின்பக்க தலையில் எலும்பு முறிவு Craniotomy defect காணப்பட்டது. மேலும் வலது மணிக்கட்டில் Ulnar bone முறிவு காணப்பட்டது. இதன் அடிப்படையில் இந்த காயங்கள் கொடுங்காயம் என சான்றளித்தேன் மேற்படி கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.6 ஆகும். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசார்ணை**

விபத்து பதிவேட்டில் யார் அழைத்து வந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் உறவினர் என குறிப்பிட்டுள்ளேன். 06.05.2022 தேதி 1 மணிக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டு உள்ளார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் வேலம்பட்டி என்றும் , குறிப்பாக எந்த இடம் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். தலையில் 20 செ.மீ வெட்டு காயம் என குறிப்பிடப்பட்டுள்ளதில் அகலம் மற்றும் ஆழம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல் தலையில் எந்த பக்கம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் பராமரிக்கப்படும் Case sheet நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நேரடியாக CT scan பார்க்கவில்லை அறிக்கையை வைத்து கருத்துரை வாங்கினேன். நான் சிகிச்சை அளிக்கும்போது ரத்தம் வழிந்து கொண்டிருந்ததா என்றால் வழிந்து கொண்டிருந்தது. ரத்தஅழுத்தம் மற்றும் நாடி துடிப்பு பார்த்தேனா என்றால் பார்த்தேன். கூட்டத்தில் தள்ளு முள்ளு ஏற்படும்போது கூர்மையான கல் மீது விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். அதேபோல் கையில் இருக்கும் காயமும் கீழே விழும்போது ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான். எத்தனை பேர் தாக்கியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கல்லால் தாக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி தகவல்களை விஜயகுமார் நல்ல சுயநினைவுடன் தான் கூறினார்.

ஒம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.